*சா.மார்ஸ், எம்.எஸ்.சி.,எம்.பில்.,எம்.எட்.,*
*முதன்மைக் கல்வி அலுவலர்,*
*வேலூார்.*

மனிதர்களின் வாழ்விடங்களுக்காக மரங்கள், விளை நிலங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை வாழ்விடங்களாக கொண்ட பறவைகள் தங்களுக்கென இருப்பிடம் இல்லாமல் அருகி வருகின்றன. இந்நிலையில் வேலூர் மாவட்டம், பொய்கை, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி கட்டிடங்களின் ஜன்னல் ஓரங்களில் பறவைகளுக்காக கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. “தேர்வின் போது பள்ளிக்கு வினாத்தாள்கள் வழங்கப்பட்ட அட்டைப் பெட்டிகளை வெளியில் வீசாமல் கோடைகாலம் தொடங்கிய நிலையில் பறவைகள் இளைப்பாறுவதற்காக அட்டைப் பெட்டிகளை கூடுகலாக அமைத்து கட்டிட ஜன்னல் ஓரத்தில் கட்டித் தொங்க விடப்பட்டுள்ளது அல்லாமல், அவற்றிற்கு தண்ணீர் மற்றும் உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது சார்ந்து தினசரி நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதை அறிந்து மாணவியர்களின் செயல்பாடுகள் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். இப்பணியில் பங்கு பெற்றவர்களுக்கும், சிந்தித்து ஊக்கம் அளித்த ஆசிரியருக்கும் எனது வாழ்த்துக்களை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து மாணவியர்களை இன்னும் அநேக செயல்களில் ஊக்குவித்து பள்ளிக்கும், துறைக்கும் பெருமை சேர்க்க மனதார வாழ்த்துகிறேன்.

27.5.4.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூார்.